கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 266/2019

பிரதிவாதி தரப்பு சாட்சி -1 சண்முகவள்ளி திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 13.11.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1 முதல் 3 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. நான் படிக்கவில்லை. நான் கடவூர் ஜமீன்தார் குடும்பத்தில் எத்தனை வருடங்களாக வேலை செய்தேன் என்றால் எனது தாயார் வேலை செய்து கொண்டிருந்தார். நானும் சிறுவயது முதலே வேலை செய்து கொண்டிருந்தேன். சுமார் 20 வருடங்களாக வேலை செய்தேன். தற்போது அங்கு வேலை செய்யவில்லை. எப்போவது ஒருமுறை போவேன். எப்போவது ஒருமுறை எதற்காக செல்வேன் என்றால் சமையல் வேலைக்காக செல்வேன். எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அரண்மனையில் சொக்கன் (எ) சொக்கலிங்கம் எத்தனை வருடங்களாக வேலை செய்தார் என்றால் சிறிது நாட்கள் வேலை செய்தார். சுமார் 2 , 3 வருடங்கள் வேலை பார்த்தார். அவர் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் கடவூரை சேர்ந்தவர். அவரை பற்றிய எல்லா விவரங்களும் தெரியுமா என்றால் தெரியும்.

2. அவர் அரண்மனையில் என்ன வேலை செய்தார் என்றால் தோட்ட வேலை செய்தார். சொக்கன் என்கிற சொக்கலிங்கம் என்பவருக்கும் எனக்கும் அரண்மனையில் எத்தனை வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது என்றால் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு நடந்தது. மேற்படி திருமணம் எங்கு நடந்தது என்றால் கடவூரில் எங்கள் வீட்டில் எனது தாயார் சம்மதத்துடன் நடந்தது. எங்கள் திருமணத்திற்கு பிறகு எத்தனை வருடங்கள் கழித்து எனது மகன் மணிவேல் பிறந்தார் என்றால் 2 வருடங்கள் கழித்து பிறந்தார். மேற்படி விவரங்களை வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நாகராஜ் அரண்மனையில் எத்தனை வருடங்கள் வேலை செய்தார் என்றால் வனத்துறையில் வேலை செய்ததால் ஜமீனுக்கும் வந்தார்.

3. நாகராஜ் காட்டில் வேலை செய்ததால் ஜமீனில் வந்து தங்கி கொள்வார் என்றால் சரிதான். நாகராஜ்க்கும் எனது கணவர் சொக்கலிங்கத்திற்கும் அறிமுகம்

உண்டு என்றால் சரிதான். அவர்கள் இருவருக்குள் எத்தனை வருட பழக்கம் என்றால் அவர்கள் பேச மாட்டார்கள். அவர்கள் இருவரும் நண்பர்களாக இருந்தார்கள் என்றும், வழக்கிற்காக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது விருப்பம் இல்லாமலே சொக்கலிங்கத்தை திருமணம் செய்து வைத்தார். எனது திருமணத்தின் போது விருப்பம் இல்லை என்பதை தெரிவித்தேனா என்றால் சொன்னேன். அதை கேட்காமல் எனது தாயார் சொக்கத்ததை எனக்கு திருமணம் செய்து வைத்துவிட்டார் என்றால் சரிதான். நாகராஜ்க்கு குடிபழக்கம் உண்டு என்றால் சரிதான்.

4. அவர் இறக்கும் சமயத்தில் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு வீட்டிற்குள் இருந்தார் என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்டு விட்டது. நாகராஜ் குடிபழக்கத்திற்கு அடிமையாகி கடைசி 5 வருடங்கள் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றால் சரியல்ல. எனது கணவர் சொக்கலிங்கம் தற்போது எங்கு இருக்கிறார் என்றால் அவர் இறந்து 16 வருடங்கள் ஆகிறது. எனது மகனுக்கு 1 வயது இருக்கும் போது அவர் இறந்துவிட்டாரா என்றால் சரிதான். எனது கணவர் எதனால் இறந்தார் என்றால் அவர் இறக்கும் போது நான் உடன் இல்லை. எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. அவர் இறக்கும் போது அவரின் வயது என்ன இருக்கும் என்றால் தெரியாது.

5. எனது மகன் எனது கணவர் சொக்கலிங்கத்திற்கு பிறந்த மகன் என்றும், அவரது நண்பர் நாகராஜ் எனது குடும்பத்திற்கு உதவி செய்து வந்ததை பயன்படுத்தி அவரது பூர்வீக சொத்துக்களில் பொய்யாக பாகம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகன் நாகராஜ்க்கு பிறந்தவர் தான். நான் அவரது இளைய மனைவி. எனக்கோ எனது மகனுக்கோ நாகராஜ் சொத்துக்களில் பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் நாகராஜ் இளைய மனைவி அல்ல என்றால் சரியல்ல. வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி,

**Additional District Munsif,**
**Kulithalai.**